அறிவுரை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில்தான் தருமபுரி மாவட்டத்தில் வத்தல்மலை என்ற பகுதிக்கு நம்முடைய மாண்புமிகு திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் சென்றபோது, அந்தப் பகுதி மக்கள் பேருந்து வசதி இல்லை என்ற குறையைப் போக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மனு அளித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை கனிவோடு பரிசீலித்து, அந்தச் சாலையை விரிவாக்கம் செய்து, பேருந்து விடுவதற்கு ஆணையிட்டார்கள். கடந்த ஆண்டு மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்தை அங்கே இயக்கி வைத்தார்கள். எனவே, பேருந்தை இயக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமக்கு வழங்கியிருக்கின்ற அறிவுரை. உறுப்பினருடைய அந்தியூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, அங்கு இருக்கின்ற மலைக் கிராமங்களில், பல்வேறு கிராமங்களுக்கு ஏற்கெனவே பேருந்து வசதிகள் இருக்கின்றன. இருந்தாலும், ஒரு சில கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் இல்லை. அதிலே குறிப்பாக மலைப் பகுதியில் அமைந்துள்ள சுண்டப்பூர், சோழகனை போன்ற கிராமங்களுக்குச் செல்லும் சாலையானது குறுகிய கரடுமுரடான மண் சாலையாக உள்ளது. இன்னொன்று, வனத் துறையிலே வனச் சாலைகள் அமைப்பதற்கு ஒன்றிய அரசிடம் அனுமதி பெற்றுத்தான் அமைக்க வேண்டிய சூழல். எனவே, அதில் இருக்கின்ற இடர்பாடுகளை நீக்கி, அங்கு புதிய சாலைகளை அமைக்கும்பட்சத்தில் அங்கே பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.

திரு. A.G. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தியூர் தொகுதி மலைவாழ் மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியிலே மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இல்லை. அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானி நகருக்குத்தான் செல்ல

2024 ஜூன் 21]

வேண்டியிருக்கிறது. அது அந்தியூரிலிருந்து 20 கிலோ மீட்டர் என்றாலும்கூட, மலைப் பகுதியிலிருந்து 70 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர், 50 கிலோ மீட்டர் என தொலைதூரம் வந்துதான் அந்த வாகனங்களைப் பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை அந்த மக்களுக்கு இருக்கிறது. எனவே, அவர்கள் சிரமத்தில் இருந்து வருகிறார்கள். அதனால் அந்தியூரில், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் திறக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும், மலைப் பகுதி மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியது அவசியம். அங்கே இருக்கின்ற வாகன செறிவினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அரசினுடைய நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

மாசுக் கட்டுப்பாடு வாரியம்

***53172—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர், மணலி, கத்திவாக்கம் மற்றும் எண்ணூர் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாக கண்காணிக்க அரசு முன்வருமா?

[2024 ஜூன் 21

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவொற்றியூர், எண்ணூர், மணலி, கத்திவாக்கம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் 17 வகையான தொழிற்சாலைகளும்—17 category Industries, பெரிய வகை கெமிக்கல் தொழிற்சாலைகளும் Red category Chemical Industries–ம் இயங்கி வருகின்றன. இத்தொழிற்சாலைகள் அனைத்தும் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள் அமைத்து, காற்று மாசை கட்டுப்படுத்துகின்றன. புகைபோக்கியிலிருந்து வெளிவரும் வாயுக்களின் தன்மையை அறிய தொடர் கண்காணிப்பு சாதனங்களை புகைபோக்கியில் நிறுவியுள்ளன. அதேபோல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலும் தொடர் கண்காணிப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் கேர் ஏர் மையம் (Care Air Centre) மற்றும் நீர் தரக் கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு தொடர் கண்காணிப்பில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.

திரு. கே.பி. சங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். திருவொற்றியூர் தொகுதியிலுள்ள திருவொற்றியூர், மணலி, எண்ணூர் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்மூலம் அரசு கண்காணிக்க முன்வருமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள்.

2024 ஜூன் 21]

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி-எண்ணூர் மறுசீரமைப்பு மற்றும் புத்துணர்வு நிறுவனம் என்ற சிறப்பு நோக்க நிறுவனம் அறிவிக்கப்பட்டு, அதற்குரிய அரசாணை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15-3-2024 அன்று வெளியிடப்பட்டு, அதனை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நிறுவனமானது, மணலி மற்றும் எண்ணூர் பகுதிகளை பசுமையாக்கும் நடவடிக்கைகள், சமூக உட்கட்டமைப்பு மேம்பாடு, நீர்நிலை பாதுகாப்பு, சதுப்பு நில மறுசீரமைப்பு, திடக் கழிவு மேலாண்மை, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய நடவடிக்கைகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளவிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 24 மணி நேரமும் அவசரகால மையம் அமைப்பதற்கும், புதிய சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகமும், 2 பறக்கும் படைகளும் அந்தப் பகுதியில் அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

[**குறிப்பு:** *ஒர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. உறுப்பினர்களை வெளியேற்றுதல் அல்லது பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்—மறுபரிசீலனை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். டிசம்பர் 2001-ல் இதுபோன்று ஒரு நிகழ்வு கடலூர் மாவட்டம், பண்ருட்டி பகுதியில் நடைபெற்று, 52 நபர்கள் மரணமுற்று, 200-க்கும் மேற்பட்டோர் மிகுந்த பாதிப்புக்குள்ளானார்கள். அப்போது உரிய நடவடிக்கை சரிவர எடுக்கப்படவில்லை என்று எல்லோரும் கருத்து தெரிவித்திருந்தனர். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. தி. வேல்முருகன் அவர்களும் அவையிலேயே இதுகுறித்து மார்ச் 2002 ஆம் ஆண்டு உரையாற்றியிருக்கிறார்கள்.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2024 ஜூன் 21*

தற்போது இந்தச் சம்பவம் குறித்து என்னுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே நான் தீவிர நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன். அதுகுறித்து நான் அனைத்து உறுப்பினர்களும் பேசிய பின்னர் விரிவாக பதில் வழங்குகிறேன். அப்போது சரிவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை; தற்போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள காரணத்தால், இப்போது பேசுகிற உறுப்பினர்கள் அந்த நிகழ்வு குறித்து பேசுவார்களோ என பயந்துதான் இவர்கள் இன்றைக்கு திட்டமிட்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றிவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) *விதிகளுக்குப் புறம்பாக நடந்துகொண்டு, மரபுகளுக்கு மாறாக குழப்பம் விளைவிக்க முயன்று, வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயக முறையில் இந்த மாமன்றம் நடைபெற வேண்டும் என்பதில், தலைவர் கலைஞர் அவர்களும், நானும் அசையாத கொள்கை உறுதி கொண்டவர்கள்.* (மேசையைத் தட்டும் ஒலி) *மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திலே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும் என்பதில் கொள்கை உறுதி கொண்டவன் இந்த முதலமைச்சர்.* (மேசையைத் தட்டும் ஒலி)

தாங்களும் பல கோரிக்கைகள் வைத்து, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு தரலாம் எனப் பரிந்துரை செய்தும், முதலமைச்சராக, அமைச்சர்களாக இருந்தவர்கள் இங்கே நடந்துகொண்ட முறை தவிர்த்திருக்கப்பட வேண்டியதுதான்.

பேரவை விதி 120—ன்கீழ் பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளீர்கள். அதில் நான் கருத்து சொல்ல விரும்பவில்லை. எனினும், என்னுடைய வேண்டுகோளாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குக் காலையிலும், மாலையிலும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற உள்ள நிலையில், வெளியேற்றப்பட்டவர்கள், இந்த அவைக்கு வினாக்கள்—விடைகள் நேரம் முடிந்த பின்னரே அனுமதிக்கப் பெறலாம் என்னும் வேண்டுகோளையும், பிரதான எதிர்க்கட்சி தன்னுடைய கருத்தினைப் பதிவு செய்ய வாய்ப்பு தர வேண்டும்

என்றும், இதனைத் தாங்கள் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெருந்தன்மையோடு, ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கள்ளக்குறிச்சி விவகாரத்திலே பங்கெடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வெளியேற்றப்பட்டவர்களுக்கு, அந்த தண்டனையை இரத்து செய்து, மீண்டும் அவைக்கு வரவழைத்து, விதி எண் 55–ன்கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானத்திலே கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பையும் கொடுக்க வேண்டும், தொடர்ந்து மானியக் கோரிக்கைகளினுடைய விவாதங்களிலும் கலந்துகொள்ள வேண்டுமென்று பெருந்தன்மையோடு சொன்ன மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த அவை நன்றி தெரிவித்து, வெளியேற்றப்பட்டவர்கள் அனைவரும் மீண்டும் அவைக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 4 ஆம் தேதி மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டபோது சென்னையே மூழ்கியது. அப்போது,* CPCL *நிறுவனத்திலிருந்து* oil *கசிந்து வெளியே வந்து கொசஸ்தலை ஆற்றை முழுவதுமாக நாசம் செய்தது. அது எப்படி நடந்தது என்றால்,* CPCL Company*–க்கும் கொசஸ்தலை ஆற்றுக்கும் இடையே கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அந்த 10 கிலோ மீட்டர் தூரமும் பக்கிங்காம் கால்வாய் வழியாகத்தான் அது வந்தது. அந்த பக்கிங்காம் கால்வாயைத் தூர்வார வேண்டுமென்று சொன்னோம். அதையும் செய்து*

தரவில்லை. அதற்குப் பிறகு, கொசஸ்தலை ஆற்றைத் தூர்வாரி, ஆழப்படுத்தித் தர வேண்டுமென்று CPCL நிறுவனத்திடம் சொன்னோம். அந்த மீனவ மக்களுக்கு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிவாரணம் வழங்கினார்கள். நம்முடைய அண்ணன் மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், நேரடியாக வந்து பார்த்து அவர்களுக்கு என்ன தேவையோ, வலைக்கு தேவையான 12,000 ரூபாயும், உறுப்பினருக்குத் தேவையான 10,000 ரூபாயும் வழங்கினார்கள். அனைத்தும் கொடுத்துவிட்டு கடைசியில் பார்த்தீர்களென்றால், அதனைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த ஆற்றில் மீனோ, இறாலோ, நண்டோ எதுவுமே இல்லை. ஆகவே, நீங்கள் அதைத் தூர்வாரி, ஆழப்படுத்தி கொடுத்தீர்களென்றால் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கும், மீன்களின் இனப்பெருக்கத்திற்கும் என அனைத்திற்குமே சிறப்பாக இருக்கும். ஆகவே, அதுபோல, எங்களுடைய திருவொற்றியூரிலுள்ள. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது நீர்வளத் துறை அமைச்சருக்கு கோரிக்கை வைத்தது மாதிரி தெரிகிறது.

திரு. கே.பி. சங்கர்: Pollution Control Board தான் அதைச் செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. கே.பி. சங்கர்: தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்தான் அதைச் செய்ய வேண்டும். அதற்கு அவர்கள்தான் முன்னிருந்து அங்கு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பேரும் இணைந்து அதைச் செய்து தாருங்கள் என்று கேளுங்கள்.

திரு. கே.பி. சங்கர்: ஒவ்வொரு வருடமும் கடல் சீற்றமாக இருக்கும்போது 10 பேர் அல்லது 15 பேர் இறந்துபோவார்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோருடைய வழிகாட்டுதலின்படி அங்கு தூண்டில்வளைவு ஒன்று ரூ.150 கோடி மதிப்பீட்டில்

2024 ஜூன் 21]

அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தூண்டில்வளைவை அமைத்த பிறகு, இந்த 3 வருடங்களாக அந்த 15 உயிர்களையும் காப்பாற்றிய அரசு, இந்த திராவிட மாடல் அரசு. இந்த திராவிட மாடல் அரசின் வழியாகத்தான் நான் சொல்கிறேன். Oil *கசிந்து அந்த ஆற்றில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி என்னவென்று கேளுங்கள். கேள்விக்கு வாருங்கள். ஆற்றைத் தூர்வாருவதற்கும். . . (குறுக்கீடுகள்)*

திரு. கே.பி. சங்கர்: *சுற்றுச்சூழல் பிரச்சினையைப் பற்றிதான் சொல்ல வருகிறேன். சுற்றுச்சூழல் துறையோடு சம்பந்தப்பட்டதுதான் இது. அதையெல்லாம் சுத்தம் செய்து தூர்வாரி, ஆழப்படுத்தி கொடுத்துவிட்டீர்களென்றால் மீண்டும் அந்த மீனவர்களுடைய வாழ்வு, வாழ்வாதாரம் உயர்த்தப்படும், ஒன்று. இரண்டாவது பிரச்சினை என்னவென்றால்,* ETPS*-லிருந்து சுடுதண்ணீர் அந்த ஆற்றுக்குள் வருகிறது. முதலில் கடலரிப்புதான் இருந்தது. இப்போது ஆற்றில் அரிப்பு ஏற்படுகிறது. ஆற்று அரிப்பினால் அங்குள்ள மக்கள் வாழ முடியாமல் மிகப் பெரிய சிரமத்திற்குள்ளாகிறார்கள். மண் எல்லாம் அடித்துக் கொண்டு போகிறது. அதையும் சம்பந்தப்பட்ட* Pollution Control Board*-லிருந்து வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு இதுவரையில் எந்தவிதமான வேலையும் அவர்கள் செய்யவில்லை. அங்குள்ள மக்களின் வீடுகள் எல்லாம் போய்விட்டன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விரைவாக நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்கிறீர்கள்.*

திரு. கே.பி. சங்கர்: *ஆம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள், இதற்கு பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாதது என்ற சூழலிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய*